**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திரு. மா.சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 19–ம் நாள்
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 03–ம் நாள் செவ்வாய்க்கிழமை
******

**அசல் வழக்கு எண். 44/2020–ல் இடைமனு எண்.6/2025**

பார்த்தசாரதி ...மனுதாரர்/வாதி

...எதிர்....

1. இளங்கோவன்
2. மதியழகன்
3. உதவி செயற்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, சீர்காழி.
4. இளநிலை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், சீர்காழி (வடக்கு).
5. வட்டாட்சியர், சீர்காழி.
6. தமிழ்நாடு அரசு சார்பாக அதன் மாவட்ட ஆட்சியர். நாகப்பட்டினம்.

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 18.02.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. சுந்தரையா அவர்கள் ஆஜராகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. கார்த்திக்ராஜன் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் கடந்த 16.09.2021 அன்று தோன்றா தரப்பினராக்கப்பட்டு, 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.03 17:24:14 +0530

வழங்கும்

**உத்தரவு**

அசல் வழக்கில் வாதி தரப்பில் ஆவணம் குறியிடவேண்டி PW1ஐ Recall செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 18 விதி 17–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

**(1.1)** மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/வாதியானவர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது சுவாதீன மீட்பு மற்றும் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து வாதி/மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில்,

**(1.2)** மனுதாரர் தரப்பில் முக்கியமான ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி, மனுதாரர் தரப்பு விசாரணை செய்து முடிக்கப்பட்டுள்ளதை ரீ ஓப்பன் செய்யக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனை குறிப்பாணையின் சுருக்கம்:**

**(2.1)** மனுதாரர்/வாதியை எதிர்மனுதாரர்கள் தரப்பில் முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது என்றும், அதில் உள்ள லேக்னோ பூர்த்தி செய்யும் நோக்குடன் வாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் PW1–ஐ ரீகால் செய்வதற்கு சரியான காரணங்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றும், சரியான காரணங்களை குறிப்பிடாமல் PW1ஐ ரீகால் செய்ய வேண்டி மனு தாக்கல் செய்துள்ளது தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது என்றும்,

**(2.2)** வழக்கில் நல்ல கட்சி இல்லாத வாதி வழக்கை காலம் கடத்த வேண்டும் என்ற நோக்கில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனுவை செவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தவிட வேண்டும்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.03 17:24:20 +0530

என்றும் 1,2 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை குறிப்பானை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. தீர்வு:</u>**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது, வழக்கு "பி" ஷெடியூலிருந்து 2ம் பிரதிவாதியை வெளியேற்ற ஒரு சுவாதீன மீட்பு பரிகாரம் கோரியும், வழக்கு "பி" ஷெடியூல் சொத்திலுள்ள கட்டுமானங்களை அகற்ற 2ம் பிரதிவாதிக்கு ஒரு கெடு நிர்ணயம் செய்து, ஒரு செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு "சி" ஷெடியூல் சொத்திலிருந்து 3,5,6 பிரதிவாதிகள், 1,2 பிரதிவாதிகளை கட்டுமானங்களுடன் அகற்ற 3,5,6 பிரதிவாதிகள் மீது ஒரு செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கு பி, சி ஷெடியூல் சொத்திலுள்ள 1,2 பிரதிவாதிகளுக்கு வழங்கியுள்ள மின் இணைப்பை 4ம் பிரதிவாதி துண்டிக்க அவர் மீது செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) கடந்த 04.11.2025ல் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டு, மேற்கொண்டு வாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வழக்கு விசாரணை நிலுவையில் உள்ள நிலையில், வாதி தரப்பில் ஆவணம் குறியிடவேண்டி PW1ஐ Recall செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 18 விதி 17–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(iii) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், மனுதாரர் PW1–ஐ ரீகால்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.03 17:24:26 +0530

செய்வதற்கு சரியான காரணங்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றும், வழக்கை காலம் கடத்தவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் ஆட்சேபனை குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(iv) அசல் வழக்கில் வாதி தரப்பில் சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டு மேற்கொண்டு வாதி தரப்பு சாட்சிய விசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் இம்மனுவானது PW1ஐ ரீகால் செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் வா.சா.1 ஐ Recall செய்வதற்கு மனுதாரர்/வாதி தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் போதுமானதாக இல்லையெனினும், அதனை ஏற்றுக்கொள்ளலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இதனால் வழக்கின் விசாரணை எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதார்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மனுதாரர்/வாதியை குறுக்கு விசாரணை செய்ய எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு வாய்ப்பும் உள்ளது. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை கீழ்க்கண்ட நிபந்தனையுடன் அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**இறுதியில்,** மனுதாரர்/வாதி செலவுத்தொகையாக ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு வரும் **11.03.2026** தேதிக்குள் கொடுக்கும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

**அழைக்க – 12.03.2026**



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.03 17:24:33 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 03ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.03 17:24:40 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | – இல்லை – |

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.03 17:24:46 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>நேரிய/வரைவு உத்தரவு</u>**
அசல் வழக்கு எண்.44/2020ல்
இடைமனு எண்.06/2025
நாள் 03.03.2026.